"சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.10,09,54,000/—, மூலதனக் கணக்கில் ரூ.18,18,00,000/— மற்றும் கடன் கணக்கில் ரூ.20,00,01,000/— ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (15—6—2017) வியாழக்கிழமை காலை 10—00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2—32 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

—ஏதுமில்லை—

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. தமிழ்நாடு பல்கலைக்கழகச் சட்டங்கள் (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்ட எண் 2/2017). (ஆங்கிலம்)

2. தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (ஒழுங்குமுறைப்படுத்தும்) இரண்டாம் திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்ட எண் 3/2017). (ஆங்கிலம்)

2017 ஜூன் 14]

3. மானியக் கோரிக்கை எண் 54—வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2017—2018. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

4. வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய செயலாக்க வரவு—செலவுத் திட்டம், 2017—2018. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

5. மானியக் கோரிக்கை எண் 15—சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2017—2018. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

6. சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய செயலாக்க வரவு—செலவுத் திட்டம், 2017—2018. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

—— —— ——

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS